பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 11 2026 FRIDAY - 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஆரோக்கியமான வாழ்க்கைக்கும், மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கும் யோகா மற்றும் ஆயுர்வேதம் போன்றவற்றின் பங்களிப்பு அளப்பரியது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தால், தொழில்துறை முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக நிதி ஆயோக் கூறியுள்ளது.

3. இஸ்லாமிய ஆராய்ச்சி அறக்கட்டளை மீதான தடையை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

4. புலம் பெயர்வோரை தடுத்து நிறுத்தாவிட்டால், மெக்ஸிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரி இரட்டிப்பாக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

5. Kumamoto மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்க்ஷயா சென் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

ஆரோக்கியமான வாழ்க்கைக்கும், மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கும் யோகா மற்றும் ஆயுர்வேதம் போன்றவற்றின் பங்களிப்பு அளப்பரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் இன்று விவேகானந்தா யோகா ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமையகமான பிரசாந்தி குதிரம் அமைப்பின்

பொன்விழா கொண்டாட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், யோகாவும், ஆயுர்வேத மருத்துவமும், இந்தியா மீதான உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாக கூறினார்.

இது போன்ற அமைப்புகள் இளைஞர்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

விவேகானந்தா யோகா ஆராய்ச்சி நிறுவனம், தனிநபர்களுக்கு யோகா கற்றுத் தருவதோடு மட்டுமின்றி, நவீன அறிவியலுக்கு ஏற்ப உயர்தரத்துடன் அதனை மேற்கொள்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில், திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள யோகா ஆராய்ச்சி நிறுவனத்தின் கிளையையும் பிரதமர் திறந்து வைத்தார்.

>>>>><<<<<

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில், படைப்பாற்றல் திறன் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் படைப்பாற்றல் பொருளாதாரம் குறித்த மாநாட்டில் பேசிய அவர், மக்களின் படைப்பாற்றல் திறன், நாட்டின் உண்மையான வலிமையாக திகழ்வதாக தெரிவித்தார்.

நமது கலாச்சார பாரம்பரியம் தொடர்ந்து சிறப்பாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

படைப்பாற்றல் என்பது குறிப்பிட்ட காலத்திற்கோ, பகுதிக்கோ உரியதல்ல என்றும் அவர் கூறினார்.

நமது படைப்பாற்றல், பன்முகத்தன்மை மற்றும் மனிதவளம் போன்றவை உலக பொருளாதாரத்தில் இந்தியாவிற்கு

வலிமையான இடத்தை தேடித்தரும் என்றும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்தார்.

>>>>><<<<<

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின் பலனாக, நாட்டில் தொழில்துறை முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

அஹமதாபாத் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்துடன் இணைந்து நித்தி ஆயோக் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், 14 முக்கிய துறைகளில் 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் உற்பத்தி அதிகரித்து, 22 லட்சத்து 66 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான பொருட்கள் விற்பனையாகியிருப்பதுடன் சுமார் 15 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஏற்றுமதி நடைபெற்றிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

நேரடியாகவும் மறைமுகமாகவும், 14 லட்சத்து 15 ஆயிரத்துக்கும் கூடுதலாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கடலோர கர்நாடகா மற்றும் கொங்கன் பகுதிகளில் ரயில்வே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம், உடுப்பி ஆகாஷ்வாணி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள, ஒரு கிலோவாட் பண்பலை சேவையை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கொங்கன் ரயில் பாதை முழுவதையும், இரட்டை வழி பாதையாக்க முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

உடுப்பி பண்பலை சேவை தொடங்கப்பட்டிருப்பது, இம்மாவட்டத்தில் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் சேவைகளை விரிவுபடுத்தும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

வாடகை கார் தொழிலை நிர்வகிப்பதற்கான விதிமுறைகளை எளிமைப்படுத்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அறிவித்துள்ளது.

இந்த உத்தேச சீர்திருத்தத்தின் படி, வாடகை கார் உரிமையாளர்கள் கார்களை ஓட்டுநருடனோ அல்லது ஓட்டுநர் இல்லாமலோ வாடகைக்கு விடுவதற்கு அனுமதிக்கப்படும்.

வாடகை கார் தொழிலை நடத்துவதற்கான வாகனங்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை, 50-லிருந்து ஐந்தாக குறைக்கப்பட்டுள்ளது.

மின்னணு உரிமம் பெற்றிருந்தால், சம்பந்தப்பட்ட மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசம் முழுவதும் ஒரே சீரான கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தி, வாடகை கார் தொழிலை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கம் என்றும் சாலை போக்குவரத்து துறை அறிவித்துள்ளது.

>>>>><<<<<

மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜூவல் வோரம், இணையமைச்சர் திரு. Durgadas Uikey ஆகியோர், குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்து பேசினர்.

குடியரசு துணைத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, இத்துறை மூலம் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குறிப்பாக, பிரதமரின் ஜன்மன் திட்டம், ஆதி கர்மயோகி, ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளி போன்ற திட்டங்களால் பழங்குடியினர் பெற்றுவரும் பயன்கள் குறித்து எடுத்துரைத்ததாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

இஸ்லாமிய ஆராய்ச்சி அறக்கட்டளை மீதான தடையை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், இந்த அமைப்பு நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும், அமைதி மற்றும் சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலும் செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறக்கட்டளையின் தலைவர் Zakir Naik-ன் பேச்சுகள் மற்றும் அறிக்கைகள், பல்வேறு சமூகத்தினரிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தி, இந்தியாவில் உள்ள இளைஞர்களை தீவிரவாத செயல்களில் ஈடுபட ஊக்குவித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ், 2016ஆம் ஆண்டு இஸ்லாமிய ஆராய்ச்சி அறக்கட்டளை, தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கப்பட்டது.

>>>>><<<<<

Chhath பூஜையை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நான்கு நாள் கொண்டாடப்படும் இந்தப் பண்டிகையின் முதல்

நாளான இன்று, Nahay-Khay தினமாக கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளில் விரதம் மேற்கொள்ளும் அனைவரும் Chhathi Maiya-வின் ஆசிர்வாதங்களை பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, Chhath பூஜையை ஒட்டி, வட மாநிலங்களில் மக்கள், கங்கை உள்ளிட்ட நதிகளில் புனித நீராடி, சூரிய பகவானை வழிபட்டனர்.

>>>>><<<<<

மெக்ஸிகோவிலிருந்து அமெரிக்காவுக்கு புலம் பெயர்வோரை தடுத்து நிறுத்தாவிட்டால், அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரி, இரட்டிப்பாக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மெக்ஸிகோ அரசு, குடியேற்ற சோதனைகளை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள மெக்ஸிகோ அதிபர் Claudia Sheinbaum, அமெரிக்க அதிபராக திரு. டோனல்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக பொறுப்பேற்ற பிறகு, இதுவரை மெக்ஸிகோவிலிருந்து எந்த வாகனமும் புலம் பெயர்வோருடன் அமெரிக்கா செல்லவில்லை என்று கூறியுள்ளார்.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக, ஸ்ரீநகர் - லே இடையேயான நெடுஞ்சாலை மற்றும் குகைப் பாதைகள் மூடப்பட்டுள்ளன.

கிஸ்துவார் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்றும் கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்பதால், சுற்றுலாப் பயணிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று, வெப்பநிலை 6 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்று தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், விவசாயிகள், தாங்கள் அறுவடை செய்த பயிர்களை பாதுகாப்பாக சேமித்து வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் சிறப்பு காவல்படை அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு படையினர், கிஸ்துவார் வனப்பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அப்பகுதி முழுவதும் பாதுகாப்பு படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, தீவிரவாதிகளின் நடமாட்டம் குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஜம்மு கஷ்மீர் காவல்துறை தலைவர் திரு. நளின் பிரபாத்தும், காவல்துறையினரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

Kumamoto மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்க்ஷயா சென் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 21-15 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Yushi Tanaka-வை வென்றார்.

>>>>><<<<<

இஸ்தான்புல் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மானவ் தாக்கர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 11-5, 7-11, 7-11, 11-4, 11-7 என்ற செட்கணக்கில் துருக்கியின் Ibrahim Gunduz-ஐ வென்றார்.

>>>>><<<<<

நியூஸிலாந்துக்கு எதிரான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 334 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் இந்தியா, சற்றுமுன்வரை 12 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 30 ரன் எடுத்துள்ளது.

Mount Maunganui-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஒவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 333 ரன் எடுத்தது.

>>>>>END<<<<<